தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தென் மாவட்டங்களில் ஆங்காங்கே மழை வாய்ப்பு

தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில் ஆங்காங்கே செவ்வாய்க்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் மற்ற பகுதிகளிலும் புதுவையிலும் வறண்ட வானிலையே நிலவும். சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் குன்னூரில் 10 மி.மீ. மழை பெய்துள்ளது.

## மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கக் கோரிக்கை

தமிழக அரசு அறிவித்த வறட்சி நிவாரண நிதி, நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என்று கோத்தகிரியில் நடைபெற்ற மலை மாவட்ட விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மலை மாவட்ட விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டம் கோத்தகிரி சங்க அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. சங்கத் தலைவர் ஐ.போஜன் தலைமை வகித்தார். துணைத் தலைவர்கள் திப்பன், குள்ளன், செயலர் ஜெயராமன் முன்னிலை வகித்தனர். ரோசிலினி வரவேற்றார்.

இக் கூட்டத்தில், கடந்த ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சிக்கு சென்னையை தவிர பிற மாவட்டங்களுக்கு நிவாரண நிதி வழங்கப்படும் என முதல்வர் அறிவித்திருந்தார். ஆனால், அந்த நிவாரணம் இன்னும் நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்.

காய்கறி மற்றும் தேயிலைக்குத் தேவையான உரம், மருந்துக்கு மத்திய அரசு மானியம் வழங்க வேண்டும். உயர் நீதிமன்றத் தீர்ப்பில் கூறியபடி பசுந் தேயிலைக்கு உண்மையான, கட்டுப்படியாகும் விலையை தொழிற்சாலைகள் வழங்க அரசு உத்தரவிட வேண்டும். மலர்ச் சாகுபடி விவசாயிகள் அரசிடம் பெற்ற கடனைச் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர். இக் கடன் தொகையை மத்திய-மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும். வன விலங்குகளிடமிருந்து விவசாயப் பொருட்களையும், விவசாயிகளையும் காப்பாற்ற விவசாய நிலங்களுக்கு 100 சதவீத மானியத்துடன் மின்வேலி அமைக்கவும், யானைகளிடமிருந்து பாதுகாக்க அகழிகளும் அமைக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீ0ர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக, இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் மறைவுக்கு கூட்டத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. துணைத் தலைவர் ஹாலம்மாள் நன்றி கூறினார்.

**கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரிப்புஆ. சமுத்திரராஜன்**

தமிழகம் முழுவதிலும் கால்நடைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், பால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் பசுக்கள், எருமை மாடுகளுக்கு கிராமங்களுக்கு நேரிடையாகச் சென்று சினை ஊசி போடும் பணியில் பயிற்சி பெற்றவர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இதன்மூலம், மாடுகள் சினை பிடிக்கும் காலம் தள்ளிப்போவது தடுக்கப்படுவதோடு, கால்நடைகளை நம்பி வாழ்க்கை நடத்துவோரின் ஆண்டு வருவாய் கணிசமாக அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் கால்நடைகளை நம்பியுள்ளவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதோடு, பால் உற்பத்தியில் தன்னிறைவை எட்டும் வகையில் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, நல்ல உடல்வாகுடன் கிடைக்கும் பாலில் அதிகளவில் கொழுப்புச் சத்து பெறும் வகையிலான பசுக்கள், எருமை மாடுகளை உருவாக்கும் நடவடிக்கையில் கால்நடைப் பராமரிப்புத் துறை முனைப்பு காட்டி வருகிறது.

முரா ரக எருமைக் கன்றுகளை ஈன்றெடுக்க தஞ்சை மாவட்டம், ஈச்சங்கோட்டையில் இருந்து சினை ஊசி பெறப்படுகிறது. அதேபோல, சிந்தி, காங்கேயம், ஜெர்சி இன சினை ஊசி கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரை அடுத்த மத்திகிரியில் உள்ள கால்நடைப் பண்ணையில் இருந்தும், ஜெர்சி, கருப்பு உயர் ரகம் உதகையிலிருந்து, லிக்யூட் நைட்ரஜன் என்னும் உறைவிந்து குச்சி பெறப்பட்டு பசுக்கள், எருமைகளுக்கு சினை பிடிக்கும் காலங்களில் ஊசி போடப்படுகிறது.

இதற்கென மாநிலம் முழுவதிலும் கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி அளித்து சினை ஊசி ரூ.10-க்கு வழங்கப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் 53 பேரும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 24 பேரும் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் 38 டிகிரி வெப்பநிலை கொண்ட கேனில் பத்திரப்படுத்தி கிராமங்களுக்கு எடுத்துச் சென்று மாடுகளுக்கு ஊசி போடுகின்றனர்.

கிராமங்களுக்கு நேரிடையாகச் சென்று சேவை செய்வதால் ஊசிக்கு ரூ.40 முதல் ரூ.50 வரை கட்டணம் பெறுகின்றனர். இதன்மூலம் அவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.300 வரை வருவாய் கிடைப்பதோடு, மாடுகள் சினை பிடிக்கும் காலம் தள்ளிப்போவது, சினை பிடிக்காமல் போவது போன்றவை முழுமையாகத் தடுக்கப்படுகிறது. இதுதவிர, தமிழகம் முழுவதிலும் 17 மாவட்டங்களில் உள்ள ஆவின் நிறுவனம் கால்நடை மருத்துவம் படித்த மருத்துவர்கள் மூலமும் கிராமங்களுக்கு நேரிடையாகச் சென்று சினை ஊசி போடும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதுகுறித்து கால்நடைப் பராமரிப்புத் துறை அதிகாரிகள் கூறியது: பெரும்பாலான மாவட்டங்களில் காளை மாடுகளை வளர்ப்போரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால், குறித்த காலங்களில் பசுக்கள், எருமை மாடுகள் சினை பிடிப்பதில் தாமதம், கரு கலைந்து போகுதல் போன்றவைகள் ஏற்படுவதைத் தடுத்து கால்நடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் சினை ஊசி போடப்படுகிறது.

சமீபகாலமாக கால்நடைகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்து வருவதோடு, அதிக கொழுப்புச் சத்து கொண்ட பால் உற்பத்தியும் உயர்ந்துள்ளது. இதன்மூலம், கால்நடை வளர்ப்போருக்கு கூடுதல் வருவாய் கிடைத்து வருகிறது.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கடந்த மாதத்தில் மட்டும் 22,500 சினை ஊசி ஆர்டர் மூலம் பெறப்பட்டு, கால்நடைகளுக்கு போடப்பட்டுள்ளது. தற்போது 41,000 சினை ஊசிகள் தருவிக்கப்பட்டுள்ளது என்றனர்.

இந்தத் தொழிலில் ஈடுபட்டு வரும் தருமபுரி மாவட்டம், நெருப்பூரைச் சேர்ந்த ஆர்.முனுசாமி கூறியது: ஆவின் நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற பிறகு முறையான பயிற்சி பெற்று இந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறேன். சைக்கிளில் கேனை கட்டி கிராமங்களுக்கு நேரிடையாகச் செல்வதன் மூலம் நாளொன்றுக்கு ரூ.300 வரையில் வருவாய் கிடைக்கிறது.

எங்களுக்குத் தேவையான லிக்யூட் நைட்ரஜன் சினை ஊசியை அதிகாரிகள் நேரிடையாக வந்து கொடுத்து விடுகின்றனர் என்றார் அவர்.

### ஜனவரி 24-இல் விவசாயிகள் குறை கேட்பு கூட்டம்

சேலம் மாவட்ட விவசாயிகள் குறை கேட்பு கூட்டம் வரும் 24-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெற உள்ளது.

ஜனவரி மாதத்துக்கான விவசாயிகள் குறை கேட்பு கூட்டம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. ஆட்சியர் க.மகரபூஷணம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் துறை அதிகாரிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே, விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தங்களது விவசாயம் தொடர்பான குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமும் தெரிவிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

### ஜன. 24, 25-ல்கால்நடை மருத்துவ பரிசோதனை முகாம்

நாகை மாவட்டத்தில் ஜன. 24, 25 ஆகிய தேதிகளில் கால்நடை மருத்துவப் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது என மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாகை மாவட்டத்தில் விலையில்லா கால்நடைகள் வழங்கும் திட்டம் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தி திறன், இனப் பெருக்கம் ஆகியவற்றை அதிகரிக்கச் செய்யவும், வெள்ளாடுகளின் எடையை அதிகரிக்கச் செய்தல், குடற்புழு நீக்குதல் உள்ளிட்டவைகளுக்காக நாகை மாவட்டத்தில் ஜன. 24, 25 ஆகிய தேதிகளில் கால்நடைகளுக்கான மருத்துவப் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

அரசின் விலையில்லா கால்நடைகள் பெற்ற விவசாயிகளும், திட்டம் சாராத கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோரும் தங்கள் கால்நடைகளை இந்த முகாமுக்கு கொண்டு வந்து பயன் பெறுமாறு ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கரும்புக்கு கூடுதல் விலை கோரி ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

கரும்பு டன்னுக்கு ரூ. 3,500 விலை அறிவிக்கக் கோரி ஜன. 29-ம் தேதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதென, விவசாயிகள் சங்க செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பெரம்பலூரில் தமிழக விவசாயிகள் சங்க பெரம்பலூர், அரியலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

மாவட்டத் தலைவர்கள் பி. மாணிக்கம் (பெரம்பலூர்), என்.பி. அன்பழகன் (அரியலூர்), மாவட்டச் செயலர் வி. நீலகண்டன், வி. விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பெரம்பலூர் சர்க்கரை ஆலை எதிரே கரும்பு டன்னுக்கு ரூ. 3,500 அறிவிக்க வேண்டும். சர்க்கரை ஆலையில் நிதி ஒதுக்கீடு இன்றி கிடப்பில்

போடப்பட்ட இணை மின் உற்பத்தி மற்றும் ஆலை நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தாததைக் கண்டித்தும், நெல், மக்காசோளம், பருத்தி, வெங்காயம், முந்திரி, கடலை, எள் ஆகியவற்றிற்கு நியாயமான கட்டுப்படியான விலை அறிவிக்கக் கோரியும் மார்க்சீய பெரியாரிய பொதுவுடைமை கட்சி அமைப்புச் செயலர் தலைமையில், ஜன. 29-ம் தேதி நூதன போராட்டத்தில் ஈடுபடுவது.

பெரம்பலூரில் உழவர் தலைவர் நாராயணசாமி நாயுடுவின் 91-வது பிறந்த தினத்தை முன்னிட்டு பிப். 6-ம் தேதி கோரிக்கை பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்துவது. வானிலை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு தனிநபர் விவசாயம் பாதிக்கப்பட்டாலும் காப்பீட்டுத் தொகை வழங்க வழி செய்ய சட்ட திருத்தம் கொண்டுவர வேண்டும். மருதையாறு நீர்த்தேக்க திட்டத்திற்கு கையக்கப்படுத்தப்படும் நிலங்களுக்கு, சந்தை மதிப்பைவிட 4 மடங்கு இழப்பீடாக வழங்க வேண்டும்.

விருத்தாசலம், அரியலூர், பெரம்பலூர், ஆத்தூர் வழியாக சேலம் வரை புதிய ரயில் தடம் அமைத்து, ரயில் விட மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கோமாரியால் பாதிக்கப்பட்டு இறந்த கால்நடைகளுக்கு ரூ. 25 ஆயிரம் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ. 3 உயர்த்தியுள்ள நிலையில், பால் விற்பனை விலையை உயர்த்தி விற்பனை செய்வதைத் தடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரியலூர் மாவட்டப் பொருளாளர் ஆர். தமிழ்வேல், வட்டார நிர்வாகிகள் வி. துரைசாமி, கே. துரைராசன், சந்தரராசன், எஸ்.கே. செல்லகருப்பு, நடராசன், பி. சீனிவாசன், விவேகானந்தன், என்.கே.பி. ராஜேந்திரன், கணபதி, வினோபாவே, கே. மதியழகன், செல்லதுரை உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### 24-ல் நாகர்கோவிலில் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம்

நாகர்கோவிலில் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜன. 24) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம் ஜன. 24-ஆம் தேதி காலை 11 மணிக்கு ஆட்சியர் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் அரங்கில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து 2013 டிசம்பரில் பெறப்பட்ட மனுக்களுக்கான பதில்கள் வழங்கப்படும். மேலும் விவசாயம் தொடர்பான கோரிக்கை மனுக்களையும் ஆட்சியரிடம் நேரில் வழங்கலாம். எனவே இதில் விவசாயிகள் திரளாக கலந்துகொள்ள வேண்டும் என அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 50 சதவீதம் மானிய விலையில் பூச்சி கட்டுப்படுத்தும் கருவிகள்

காஞ்சிபுரம்:மணிலா திட்டத்தின் கீழ், 50 சதவீதம் மானியத்தில், பூச்சிகளை கட்டுப்படுத்தும் கருவிகளை பெற, விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என, வேளாண்மை துறை அறிவித்துள்ளது.

சம்பா பருவத்தில் பயிரிட்டுள்ள விவசாயிகளின் பயிர்களில், நெற்கதிர் எடுக்கும் நேரங்களில் சுருள்புழு தாக்கம், தழைப்பூச்சிகளின் தொல்லை அதிக அளவில் காணப்படும். இதனால், நெல் மகசூல் குறையும் வாய்ப்பு உள்ளது.

இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கு இனக்கவர்ச்சி பொறி, விளக்குப்பொறிகள் அடங்கிய பூச்சிகளை கட்டுப்படுத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளன. இது, மணிலா திட்டத்தின் கீழ், 50 சதவீதம் மானியமும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயி கள், பயிரிட்டுள்ள நிலங்களின் சிட்டா, அடங்கல் அடங்கிய உரிய ஆவணங்களுடன், அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் விண்ணப்பிக்கலாம்.

மேலும் விவரங்களை அறிய, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அலுவலக அதிகாரிகளை நாடலாம் என, வேளாண்மை இணை இயக்குனர் சவுந்திரராஜன் தெரிவித்துள்ளார்.

### கத்தரியில் பூச்சி தாக்குதல்: விவசாயிகள் கவலை

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி பகுதியில் கத்தரி செடிகளில் பூச்சி தாக்குதல் உள்ளதால் மகசூல் மற்றும் விலை குறைவு காரணமாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

விவசாய ஆட்கள், தண்ணீர் பற்றாக்குறை காரணமாக நீண்ட கால பயிர்களை

சாகுபடி செய்யாமல் குறுகிய கால பயிரான கத்தரிக்காய், மிளகாய், தக்காளி, வெண்டை, முள்ளங்கி , காளி பிளவர் போன்ற காய்கறிகளை சாகுபடி செய்ய ஆரம்பித்துள்ளனர்.

கடந்த கார்த்திகை, மார்கழி மாதங்களில் அதிக விளைச்சல் தரக் கூடிய நாட்டு ரகம், சிவந்தம்பட்டி ரக கத்தரியை விக்கிரவாண்டி, ஆசூர்.சாத்தனூர், பனையபுரம், தொரவி, ராதாபுரம் பகுதிகளில் பயிர் செய்துள்ளனர்.

தற்போது மழையின்மை, அதிக பனிப்பொழிவு போன்ற காரணங் களால் கத்தரிக்காய் அதிகமாக விளைந்திருந்தாலும் திடீர் பூச்சி தாக்குதல் உள்ளது. 50 சதவீதம் காய்கள் பூச்சி தாக்குதலால் பாதித்துள்ளன. ஏக்கருக்கு 800 கிலோ விளைச்சலில் 400 கிலோ மட்டுமே நன்றாக உள்ளது.

கடந்த ஆண்டுகளில் சந்தைகளில் கிலோ ரூபாய் 30 வரை விற்றது. தற்போது அதிக விளைச்சல் காரணமாக சந்தையில் கிலோ 6 ரூபாய்க்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது. சில இடங்களில் தோட்டங்களில் சில்லறை விற்பனையாக ரூபாய் 10 முதல் ரூபாய் 15 வரை விற்று முதல் தேற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். உரம் , பூச்சி மருந்து அதிக விலை கொடுத்து வாங்கி பயிர் செய்தும் பூச்சி தாக்குதலில் மகசூல் குறைந்ததால் சாகுபடியில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பனி குறைந்து பருவ நிலை மாறினால் ஓரளவு போட்ட பணத்தை எடுக்கமுடியும் என்ற நம்பிக்கையில் காலத்தை எதிர்நோக்கி காத்துக் கொண்டிக்கின்றனர்.

## இயற்கை முறை நெல் சாகுபடி

மரக்காணம்:மரக்காணம் பகுதியில் இயற்கை முறை விவசாய நெல்சாகுபடி புதுச்சேரி அரசின் சிறப்பு பிரதிநிதி பக்தவச்சலம் நெல் அறுவடையை துவக்கி வைத்தார்.

புதுச்சேரி அப்பாபைத்தியம் சுவாமி அறக்கட்டளை சார்பில் மரக்காணம்

ஒன்றியத்திற்குட்பட்ட புதுப்பாக்கம் ஊராட்சியில் கே.என்.பாளையம்கிராமத்தில் 15 ஏக்கர் பரப்பளவில் மைசூர்மல்லி, வாடன் சம்பா நெல் ரகங்களை சம்பா போக சாகுபடியாக இயற்கை முறையில் நடவு செய்தனர்.

இதற்கான அறுவடை திருவிழா கே.என்.பாளைம் கிராமத்தில் நடந்தது. அப்பா பைத்தியம் சுவாமி அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் சவுந்தரவள்ளி வரவேற்றார், பத்மா ஜெகதீஸ்வரன், லட்சுமி தங்கவேலு முன்னிலை வகித்தனர்.

புதுச்சேரி அரசின் சிறப்பு பிரதிநிதி பக்த்தவச்சலம் நெல் அறுவடையை துவக்கி வைத்தார். காமராஜர் வேளாண்மை அறிவியல் இயக்க சேர்மன் சுரேஷ் , ஜெயராமன், புதுப்பாக்கம் ஊராட்சி தலைவர் தயாளன் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

செஞ்சி:செஞ்சி அடுத்த செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் மகளிர் கரும்பு விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.

ஆலை உப தலைவர் ரமேஷ் தலைமை தாங்கி பயிற்சியை துவக்கி வைத்தார். துணை பொது மேலாளர்கள் கரும்பு விஜயகுமார், விரிவாக்கம் லட்சுமணன் முன்னிலை வகித்தனர்.

உதவி பொது மேலாளர் பாஸ்கர் தாஸ், ஆராய்ச்சி மேலாளர் சீனுவாசன், விரிவாக்க மேலாளர் வெங்கடேசப் பெருமாள் பயிற்சியளித்தனர்.

நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டம், சொட்டு நீர் பாசனம், நி ழல் வலை மூலம் செதில் பரு நாற்று நடவு. இயற்கை இடுபொருட்கள், உயிர் உரங்கள் உபயோகித்தல் மற்றும் மகளிர் தொழில் முனைவோருக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

பயிற்சி ஏற்பாடுகளை பயிற்சி அலுவலர் வித்யா செய்தார். 25 பெண் விவசாயிகள், கரும்பு அலுவலர்கள், விரிவாக்க அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணை நீர்திறப்பு 2,000 கனஅடியாக குறைப்பு

மேட்டூர்: டெல்டா மாவட்டங்களில், சம்பா அறுவடை துவங்கியதால், மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு, நேற்று, 2,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து, டெல்டா சாகுபடிக்கு, கடந்த ஆக.,2ம் தேதி நீர் திறக்கப்பட்டது. நீரை பயன்படுத்தி, டெல்டா மாவட்டங்களில், 12 லட்சம் ஏக்கரில் விவசாயிகள் பயிர் சாகுபடி மேற்கொண்டனர். தற்போது டெல்டாவில் சம்பா நெல் அறுவடை, துவங்கியதால் பாசனத்துக்கான நீர்தேவை குறைந்துள்ளது. இதனால், வினாடிக்கு, 6,000 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு, கடந்த, 17ம் தேதி, 5,000 கனஅடியாகவும், நேற்று காலை, 6 மணி முதல் வினாடிக்கு, 2,000 கனஅடியாகவும் குறைக்கப்பட்டது. சில நாட்களாக மேட்டூர் அணைக்கு வினாடிக்கு, 500 கனஅடிக்கும் குறைவான தண்ணீரே வருகிறது. நேற்று அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு, 83 கனஅடியாக குறைந்தது. நீர்திறப்பை விட நீர்வரத்து மிகவும் குறைவாக இருப்பதால், கடந்த டிசம்பர், 1ம் தேதி, 85.110 அடியாக இருந்த, மேட்டூர் அணை நீர்மட்டம், நேற்று, 52.590 அடியாகவும், 47.237 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, நேற்று, 19.483 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது. கடந்த, 51 நாளில் அணை நீர்மட்டம், 33 அடியும், நீர் இருப்பு, 28 டி.எம்.சி.,யும் சரிந்துள்ளது. வரும், 28ம் தேதி டெல்டா பாசன நீர் முழுமையாக நிறுத்தப்படும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## இறைச்சி மாடுகளை கொண்டு வர விதிக்கப்பட்ட தடை நீக்கம்

ஊட்டி : பிற மாவட்டங்களில் இருந்து, நீலகிரி மாவட்டத்திற்கு இறைச்சி மாடுகளை கொண்டு வர விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழகத்தில், கடந்த 3 மாதமாக நிலவி கோமாரி நோயின் தாக்கம் தற்போது கட்டுக்குள் வந்துள்ளது.

கோமாரி நோய் தாக்குதலால், மாவட்டத்தில் உள்ள மாட்டிறைச்சி கடைகளுக்கு,

பிற மாவட்டங்களில் இருந்து இறைச்சிக்காக மாடுகளை கொண்டு வர தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், கோமாரி நோய் தாக்குதல் கட்டுக்குள் வந்துள்ளதை தொடர்ந்து, இந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய் பரவுவதை தவிர்க்க, ஒரு பகுதியில் இருந்து கொள்முதல் செய்த கால்நடைகளை மட்டும், ஒரே வாகனத்தில் ஏற்றி வர வேண்டும்; வெவ்வேறு பகுதிகளில் கொள்முதல் செய்த கால்நடைகளை ஒரே வாகனத்தில் ஏற்றி வருவதை தவிர்க்க வேண்டும்.

எனினும், கால்நடைகளை பிற மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் கொள்முதல் செய்வதற்கு முன், "கொள்முதல் செய்ய உள்ள கால்நடைகளில் தொற்று நோய்கள் ஏதும் இல்லை; முழு ஆரோக்கியத்துடன் உள்ளது' என்ற சான்றிதழை அப்பகுதியில் உள்ள அரசு கால்நடை உதவி மருத்துவரிடம் பெற்ற பின்பே, நீலகிரி மாவட்டத்திற்குள் பிற மாவட்டங்களில் இருந்து கால்நடைகளை கொண்டு வர வேண்டும்.இவ்வாறு, கலெக்டர் சங்கர் கூறியுள்ளார்.

## விளைச்சல் அதிகரிப்பால் வெங்காயம் விலை...வீழ்ச்சி தினமும் ஐந்தாயிரம் மூடைகள் மார்க்கெட்டிற்கு வரத்து

திண்டுக்கல்:விளைச்சல் அதிகரிப்பு காரணமாக, மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்துள்ளதால், திண்டுக்கல் மார்க்கெட்டில் சின்னவெங்காயத்தின் விலை கிலோ ரூ.10 ஆக குறைந்தது.

பெரம்பலூர், திருவில்லிபுத்தூர், விளாத்திகுளம், ஒட்டன்சத்திரம், உடுமலைபேட்டை உள்ளிட்ட பகுதி களில் சின்னவெங்காயம் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. அப்பகுதியில் விளைச்சல் அமோகமாக இருப்பதால், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு சின்னவெங்காயத்தின் வரத்து அதிகரித்துள்ளது.

தினமும் மூவாயிரம் மூடைகள் வரை வந்த திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு, நேற்று

மட்டும் ஐந்தாயிரம் மூடைகள் வரை விற்பனைக்கு வந்தது. இதனால், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை ரூ.10 ஆக குறைந்தது. அதேபோல், மகாராஷ்டிரத்தில் இருந்து 20 டன் வரை பெல்லாரி விற்பனைக்கு வந்ததால், அதன் விலையும் ரூ.12 ஆக குறைந்தது.

வியாபாரி ஒருவர் கூறுகையில், "" சில மாதங்களுக்கு முன்பு வரை, வெங்காயத்தின் விலை உச்சக்கட்டத்தில் இருந்ததால், நல்ல விலை கிடைக்கும் என, விவசாயிகள் அதிக அளவில், வெங்காயத்தை சாகுபடி செய்துள்ளனர்.

இதனால் விளைச்சல் அதிகரித்து, விலை சரிந்துள்ளது. மலேசியாவிற்கு வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுவதால், அதன் விலை ஓரளவு கட்டுக்குள் உள்ளது.

இல்லாவிட்டால் கடுமையாக குறைந்துவிடும்," என்றார்.

## வறட்சி நிவாரணத்திற்கு ஏங்கும் விவசாயிகள்

திண்டுக்கல்:வறட்சி மாவட்டமாக திண்டுக்கல்லை அறிவித்து, நிவாரண பணிகளை துவக்க மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டுமென்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சராசரி அளவை விட குறைந்தளவு மழையே பெய்துள்ளது. பல்வேறு பகுதிகளில் தென்னை மரங்கள் முழுமையாக காய்ந்து விட்டன. மானாவாரி பயிர்கள் அழிந்துவிட்டன.

2012 ல் ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆனால் அதற்கான நிவாரணம் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கவில்லை. தற்போது 2013 லும் இதே நிலை நீடித்திருப்பதால் விவசாயிகள் முழு நிவாரணம் தங்களுக்கு வழங்கப்படுமா என்ற குழப்பத்தில் உள்ளனர்.

பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு அதை பெற்றுக்கொடுப்பதில் அதிகாரிகள் ஆர்வம் செலுத்தவில்லை என்ற குறையும் விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு காலதாமதப்படுத்தாமல் முன்னதாகவே திண்டுக்கல் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து அதற்கான நிவாரணத்தை முழுமையாக பெற்று தர மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டுமென்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

## கடும் பனிப்பொழிவு: திராட்சை விலை சரிவு

திண்டுக்கல்:திண்டுக்கல் பகுதியில் கடும் பனிப்பொழிவு காரணமாக, கருப்பு திராட்சை பழத்தின் விலை சரிந்துள்ளது.

திண்டுக்கல் அருகே ஜாதிகவுண்டன்பட்டி, ஊத்துப்பட்டி, செட்டியப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 300 ஏக்கரில் கருப்பு திராட்சை பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் விளையும் திராட்சை பழத்தை மதுரை, கரூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். தற்போது, இப்பகுதியில் திராட்சை அதிகளவில் விளைந்துள்ளது. ஆனால், கடும் பனிப்பொழிவு காரணமாக, அஸ்வினி, கத்தாளபூச்சி தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவும் திரட்சை பழத்தை வியாபாரிகள் கொள்முதல் செய்ய ஆர்வம் காட்டவில்லை. இதனால், விலை சரிந்துள்ளது. கடந்த மாதம் ஒரு கிலோ ரூ.25 க்கு விற்கப்பட்ட திராட்சை, தற்போது குறைந்து ரூ.18 க்கு விற்பனையாகிறது. இதனால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திராட்சை விவசாயி ஏ.வீரையா கூறுகையில், ""திராட்சை கொடியை, கவாத்து செய்த பின், மூன்றரை மாதங்களில் பழத்தை பறித்துவிடலாம். தாமதப்படுத்தினால் கொடியிலேயே அழுகிவிடும். இதனால், வியாபாரிகள் கேட்கும் விலைக்கு விற்று வருகிறோம்," என்றார்.

## தென்னை சாகுபடியை ஊக்கப்படுத்த புதிய திட்டம் தயார்

கம்பம்:தேனி மாவட்டத்தில் நோயால் பாதிக்கப்பட்டு, தென்னை மரங்கள் வெட்டப் படுகின்றன. தென்னை சாகுபடி பரப்பு, குறைந்து வருகிறது. தென்னை சாகுபடியை ஊக்கப்படுத்த, விவசாயத்துறை திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது. தேனி மாவட்டத்தில், அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படும் பயிர்களில் தென்னை முக்கிய இடத்தை பிடிக்கிறது. சுமார் 10 ஆயிரம் எக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.

பராமரிப்பு தேவைப்படாத தென்னைக்கு, அதிக அளவில் உரம், தண்ணீர் தேவைப்படாது. ஒரு மாதத்திற்கு ஒரு முறை தண்ணீர் மற்றும் உரம் வைத்தால் போதுமானது.

ஆனால், தென்னையின் அனைத்து பாகங்களும், விவசாயிகளுக்கு வருவாயை தருகின்றன. மட்டை, சோகை, இளநீர், தேங்காய் என அனைத்தும் பயன்படும். இந்நிலையில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, தென்னையில் "ஈரியோபைடு', கேரள வாடல் நோய் தாக்கி, தென்னையை பாடாய் படுத்தி வருகிறது. நோய் பாதித்த மரங்களை விவசாயிகள் வெட்டி வருகின்றனர்.

தென்னை மரங்கள் தொடர்ந்து வெட்டப்படுவதால், தென்னை சாகுபடி செய்யும் பரப்பு குறைந்து விட்டது. இதே நிலை நீடித்தால், தென்னை இருந்த இடம் தெரியாமல் போய்விடும். எனவே,விவசாயத்துறை தென்னை சாகுபடியை ஊக்கப்படுத்த திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்த, கொச்சியில் உள்ள மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியத்தின் உதவியை நாடியுள்ளது. இது தொடர்பாக, விவசாயத்துறையினர் கூறுகையில்,"" தென்னை சாகுபடி பரப்பு குறைவதை தடுக்க திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. அதன்படி விவசாயிகளுக்கு இலவசமாக ஒட்டு ரகங்களை வழங்குவது, மானிய விலையில் உரம் மற்றும் பூச்சிமருந்துகளை

தருவது, 5 ஆண்டுகளுக்கு பராமரிப்பு செலவுகளுக்கென நிதி தருவது, சாகுபடி செய்யும் காய்களை அரசே கொள்முதல் செய்வது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுடன் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்துவதில், மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியம் முக்கிய பங்காற்றும். இதற்கான பூர்வாங்க பணிகள் துவங்கியுள்ளது. இது மாதிரியான திட்டங்கள் ஏற்கெனவே தென்னை வளர்ச்சி வாரியத்திடம் உள்ளது. எனவே, தென்னை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன், தென்னை சாகுபடி பரப்பை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம்' என்றனர்.

## வறட்சியால் தேனி மாவட்டத்தில் 20 சதவீதம் பால் உற்பத்தி பாதிப்பு

தேனி:தேனி மாவட்டத்தில், நிலவும் கடும் வறட்சியால் பால் உற்பத்தி 20 சதவீதம் வரை பாதிக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில், ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 665 பசுமாடுகளும், 6,397 எருமை மாடுகளும், ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 256 செம்மறி ஆடுகளும், ஒரு லட்சத்து, ஆயிரத்து 965 வெள்ளாடுகளும், 12 லட்சத்து 58 ஆயிரத்து 883 நாட்டுக்கோழிகளும், 5977 பன்றிகளும், 17 ஆயிரத்து 760 நாய்களும், 168 குதிரைகளும், 690 கழுதைகளும், 1016 வாத்துக்களும் உள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளாகவே மாவட்டத்தில் சரியாக மழை பெய்யவில்லை. இதனால் வனங்களும், அதை ஒட்டிய நிலங்களும் வறண்டு வந்தன. கடந்த 2013ம் ஆண்டு மொத்தமே சராசரி மழையில் 40 சதவீதம் மட்டுமே பெய்தது.

2014ம் ஆண்டும் வறட்சி தொடர்கிறது. இதனால் மாவட்டம் முழுவதுமே வறண்டு காணப்படுகிறது. அனைத்து நீர் நிலைகளிலும் தண்ணீர் இல்லாத சூழ்நிலை காணப்படுகிறது. காடுகள், வயல்கள், தோட்டங்கள் என எல்லாமே வறண்டுள்ளன. தரிசு நிலங்களில் புல் கூட வளரவில்லை.இதனால் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு பசுந்தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மக்காச்சோளம் உட்பட செயற்கை தீவன உணவுகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. கால்நடைகளுக்கு தேவையான தண்ணீரும் கிடைக்கவில்லை. இதனால், கால்நடைகளுக்கு உணவு மற்றும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பால் உற்பத்தி கடுமையாக குறைந்து வருகிறது. தற்போதய நிலையில் எல்லா மாடுகளிலும் 20 சதவீதத்திற்கு மேல் பால் உற்பத்தி குறைந்து விட்டது. வரும் மாதங்களில் 40 சதவீதத்திற்கு மேல் பால் உற்பத்தி குறையும் அபாயம் எழுந்துள்ளது. பால் மாடுகளையும், இதர கால்நடைகளையும் வளர்க்க முடியாமல் விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர். 45 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பால் மாடு, தற்போது விலை குறைந்து 30 ஆயிரத்திற்கு கூட விற்க விவசாயிகள் தயாராக உள்ளனர். அப்படி இருந்தும் மாடுகளை வாங்க விவசாயிகள் தயாராக இல்லை. இதனால் விற்கவும் முடியாமல், வளர்க்கவும் முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

## தென் தமிழகத்தில் மழை தொடரும்

சென்னை: தென் தமிழகத்தில் பெய்து வரும் மழை, இன்னும் மூன்று நாட்களுக்கு தொடரும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. தென் கிழக்கு வங்கக்கடலில், புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி, தொடர்ந்து மேற்கு நோக்கி நகர்ந்து வருகிறது. ஏற்கனவே, லட்சத்தீவு அருகில் நிலை கொண்டுள்ள காற்று மேலடுக்கு சுழற்சி, குஜராத் வரையில் நீடித்துள்ளது. இவற்றின் காரணமாக, தென் தமிழகம், கேரளா மற்றும் லட்சத்தீவு பகுதிகளில், மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம், அதிகபட்சமாக, குன்னூரில், 1 செ.மீ., மழை பதிவானது. தொடர்நது, அடுத்த மூன்று நாட்களுக்கு இந்த மழை நீடிக்கும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. சென்னையை பொறுத்தவரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யும்.

## கால்நடைகளுக்கும் "ரேஷன்': தமிழக அரசு புதிய திட்டம்



திருப்பூர்: கால்நடைகளுக்கு தேவையான தீவனத்தை தமிழக அரசே வழங்க முடிவு செய்துள்ளது.

கடும் வறட்சி காரணமாக தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

வெளிமார்க்கெட்டில் அதிக விலைக்கு தீவனங்களை வியாபாரிகள் விற்கின்றனர். அதிக விலைக்கு தீவனங்களை வாங்க முடியாத பலர் வேறு தொழிலுக்கு மாறுகின்றனர். மாடு எண்ணிக்கை குறைவதால், பால் கொள்முதல் குறைகிறது; விலையும் அதிகரிக்கிறது. அத்தியாவசிய பொருளில் முக்கியமானது பால் என்பதால், அதன் விலையை கட்டுப்படுத்த, மாடுகளுக்கான தீவனத்தை அரசே குறைந்த விலையில் வழங்க முடிவு செய்துள்ளது. இதற்காக, தமிழகம் முழுவதும் தீவன கிடங்கு அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கால்நடைத்துறை இணை இயக்குனர் ஒருவர் கூறியதாவது: மாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு தீவன கிடங்குகள் அமைக்கப்படும். மாடு வளர்ப்பாளர், விவசாயி, தங்களது ரேஷன் கார்டை கொண்டு வந்து, எத்தனை மாடு என்பதை பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்தபின், ஒவ்வொரு மாட்டுக்கும் தனி கார்டு வழங்கப்படும். மாடுகளுக்கு தேவையான தீவனத்தை, கார்டை காண்பித்து, தீவன கிடங்கில் பெறலாம். வெளிமார்க்கெட்டில் வைக்கோல் ஒரு கிலோ, எட்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மொத்தமாக கொள்முதல் செய்து கிலோ இரண்டு ரூபாய்க்கு அரசு விற்க உள்ளது. மாடு ஒன்றுக்கு மூன்று கிலோ வைக்கோல் வழங்கப்படும். எத்தனை மாடு வைத்திருந்தாலும் அதிகபட்சமாக ஒரு நாளைக்கு 21 கிலோ மட்டுமே கொடுக்கப்படும்,' என்றார்.

28 தீவன மையங்கள்:

32 மாவட்டங்களில் தலா நான்கு தீவன கிடங்குகள் விதம் மொத்தம் 128 தீவன கிடங்குகள் அமைக்கப்பட உள்ளன. சேலம் மாவட்டத்தில் தலைவாசல், கொங்கணாபுரம், மேச்சேரி, நங்கனவள்ளி; கோவையில் கிணத்துக்கடவு, மதுக்கரை, சூலூர், சுல்தான்பேட்டை; திருப்பூரில் செங்கப்பள்ளி, காங்கயம், மூலனூர், வாளவாடி பகுதியில் தீவன கிடங்குகள் அமைகின்றன.

கலெக்டரே பொறுப்பு:

அந்தந்த மாவட்ட கலெக்டரின் நேரடி கட்டுப்பாட்டில் தீவன கிடங்கு கொண்டு வரப்படுகிறது. கலெக்டர், கால்நடைத்துறை இணை இயக்குனர், துணை இயக்குனர் ஆகிய மூவர், வேளாண் இணை இயக்குனர், தோட்டக்கலை அதிகாரி ஒருவர் உள்ளிட்டோர் இணைந்த குழு ஏற்படுத்தப்படும். வைக்கோல் கொள்முதல் செய்வது, உண்மையான பயனாளிகளுக்கு வழங்குவது உள்ளிட்ட பணி, அக்குழுவின் மேற்பார்வையில் நடக்கும். இம்மாத இறுதியில், ஒவ்வொரு மாவட்டத்திலும் இக்குழு தனது செயல்பாட்டை துவக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ஏர் உழும் விவசாய கருவிகளுக்கு மானியம்...ரூ.30 ஆயிரம்! நெல் உற்பத்தியை பெருக்க அரசு முயற்சி

திருத்தணி:விவசாயிகள், நெல் பயிரிடுவதை ஊக்குவிக்கும் வகையில், மானிய விலையில் ஏர் உழும் கருவி (ரோட்டோவேட்டர்) மற்றும் தார்ப்பாய் வழங்க, அரசு, நிதி ஒதுக்கீடு

செய்துள்ளது.

நெல் சாகுபடிக்காக...

திருவள்ளூர் மாவட்டத்தில், தற்போது, கூலியாட்கள் பற்றாக்குறை, ஏர் உழுவதற்கு மாடுகள் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் பெரும்பாலான விவசாயிகள், நெல், வேர்க்கடலை பயிர்களை தவிர்த்து, கரும்பு, சவுக்கு ஆகிய பயிர்களுக்கு மாறியுள்ளனர். விவசாயிகளை மீண்டும் நெல் சாகுபடி பக்கம் இழுப்பதற்காக, 96

ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஏர் உழும் கருவியை வாங்குவதற்கு 30 ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. அதே போல் தானியங்களை பாதுகாக்க 4,000 ரூபாய் மதிப்புள்ள தார்பாய்க்கு 2,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். இதற்கான அரசாணை கடந்த 10ம் தேதி வெளியிடப்பட்டது.
190 விவசாயிகள் இது குறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண் துறை உதவி இயக்குனர் ஒருவர் கூறியதாவது:
விவசாயிகள் பயிர் செய்வதற்கு வசதியாக, மாவட்டத்தில், 40 பேருக்கு ஏர் உழும் கருவிகள், 150 பேருக்கு, தார்ப்பாய் ஆகியவை, அரசு மானியத்துடன் வழங்கப்பட உள்ளது. இதற்காக, விவசாயிகள், நிலத்தின் கணினி சிட்டா, ரேஷன் கார்டு ஆகிய நகல்களுடன், அந்தந்த பகுதியில் உள்ள, வேளாண் துறை அலுவலகத்தில் மனு கொடுக்கலாம். அரசு மானியம் கழித்து, மீதமுள்ள தொகைக்கு, வரைவு காசோலை வாங்கிக் கொண்டு, யார் முதலில் சமர்ப்பிக்கிறார்களோ, அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், விவசாய கருவிகள் வழங்கப்படும். வரும் மார்ச் மாதம் வரை விவசாயிகள் மனு கொடுத்து கருவிகள் பெறலாம்.
இவ்வாறு அவர் கூறினார்.

## பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடாததால் 1000 ஏக்கர் நெற்பயிர் கருகும் அவலம்

பரங்கிப்பேட்டை:பரங்கிப்பேட்டை அருகே பாசன வாய்க்காலில் கடந்த 20 நாட்களாக தண்ணீர் திறந்துவிடாததால் 1000 ஏக்கரில் சாகுபடி செய்த நெற்பயிர்கள் கருகி வருவதால் விவசாயிகள் வேதனையில் தவிக்கின்றனர்.
டெல்டா பாசனத்தின் கடை மடை பகுதியான பரங்கிப்பேட்டை ஒன்றிய கிராமங்களில் உள்ள விளை நிலங்கள் அரியகோஷ்டி வாய்க்கால் முலம் பாசனம் பெற்று வருகிறது. இப்பகுதியில் பெரும் பாலான விவசாயிகள் நேரடி விதைப்பு செய்துள் ளனர்.
தொடர்ந்து மழை பெய்து வந்ததாலும், அரிய கோஷ்டி வாய்க்காலில் வந்த

தண்ணீரைக் கொண்டு விவசாயிகள் நெற்பயிரை காப்பாற்றி, களை எடுத்து உரம், பூச்சிமருந்து தெளித்து வந்ததால் நெற்பயிர் நன்கு வளர்ந்தது.

இந்நிலையில் கடந்த மாதம் அரியகோஷ்டி வாய்க்காலில் சுமார் அரை அடி அளவே தண்ணீர் வந்தது. இதனை வயலுக்கு பாய்ச்ச முடியாததால் நெற்பயிர்கள் கருகத் துவங்கின. ஆவேசமடைந்த அரியகோஷ்டி உள்ளிட்ட நான்கு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் அரியகோஷ்டி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடக்கோரி கடந்த மாதம் பு.முட்லூரில் சாலை மறியல் செய்ய முயன்றனர்.

அதனைத் தொடர்ந்து அரியகோஷ்டி வாய்க்காலில் சில நாட்கள் போதுமான அளவிற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. விவசாயிகள் நெற்பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சினர். தற்போது நெற்பயிர்கள் கதிர் வந்த நிலையில் உள்ளன.

இந்நிலையில் கடந்த 20 நாட்களாக அரியகோஷ்டி வாய்க்காலில் குறைந்த அளவே தண்ணீர் திறந்துவிடப்படுவதால் நெற்பயிர்களுக்கு தண்ணீர் செல்லவில்லை.

இதனால் சுமார் 1000 ஏக்கருக்கு மேல் நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகி வருவதால் விவசாயிகள் செய்வதறியாமல் தவித்து வருகின்றனர்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் கண்டுக்கொள்ளவில்லை என விவசாயிகள் புலம்புகின்றனர்.

விவசாயிகளின் நலன்கருதி அரியகோஷ்டி வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாயி பரமசிவம் கூறுகையில், இந்தாண்டு அதிகளவு நேரடி நெல் விதைப்பும், நடவு பயிரும் செய்துள்ளோம். ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 20 நாட்களாக அரியகோஷ்டி வாய்க்காலில் தண்ணீர் வராததால் நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகி வருகின்றன.

வீராணத்தில் போதிய அளவு தண்ணீர் இருந்தும், அரியகோஷ்டி வாய்க் காலில் தண்ணீர் திறக்க அதிகாரிகள் மறுப்பது வேதனையாக உள்ளது என்றார்.

## தாராபுரம் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் : கலெக்டரிடம் விவசாயிகள் வலியுறுத்தல்

திருப்பூர் : "தாராபுரம் பழைய அமராவதி பாசன பகுதிகளில் நெல் அறுவடை துவங்க இருப்பதால், அரசியல் தலையீடு இல்லாமல், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும்,' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பொதுமக்களிடம் குறைகேட்பு கூட்டம், திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். டி.ஆர்.ஓ., பாரிவேல், தனி துணை கலெக்டர் கோபெண்ட் முன்னிலை வகித்தனர். பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்கள் மனு கொடுத்தனர்.

* மா.கம்யூ., தெற்கு ஒன்றிய செயலாளர் உண்ணிகிருஷ்ணன் கொடுத்த மனுவில், "மாநகராட்சி முழுவதும் குப்பை தேங்கியுள்ளது. இதுவரை இல்லாத அளவுக்கு கொசுத்தொல்லை அதிகரித்துள்ளது. விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள், மருத்துவ தேவைக்கு அதிகம் செலவிட வேண்டியுள்ளது. "கொசுத்தொல்லையை கட்டுப்படுத்த மருந்து தெளிப்பதில்லை; புகை மருந்து அடிப்பதில்லை. கொசுவை ஒழிக்க போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என்று தெரிவித்துள்ளார்.

* மாநகராட்சி அ.தி.மு.க., கவுன்சிலர் வசந்தாமணி கொடுத்த மனுவில், "ஆண்டிபாளையத்தில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி உள்ளது; 800க்கும் அதிகமானவர்கள் பயில்வதால், உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும். பள்ளியில் இட வசதி இல்லாததால், அருகில் உள்ள அறநிலையத்துறைக்கு சொந்தமான இடத்தை தேர்வு செய்து, அங்கு உயர்நிலைப்பள்ளி உருவாக்க வேண்டும்,' என்று தெரிவித்துள்ளார்.

* தாராபுரம், ஜீவா காலனி மக்கள் கொடுத்த மனுவில், "21 ஆண்டுகளுக்கு முன்

பட்டா வழங்கியும், இதுவரை அடிப்படை வசதி செய்யவில்லை. அதனால், மின் இணைப்பு பெற முடியவில்லை. பட்டா வழங்கிய இடத்தில் அடிப்படை வசதி செய்து கொடுக்க வேண்டும்,' என்று தெரிவித்துள்ளனர்.

* த.மு.மு.க., நிர்வாகிகள் கொடுத்த மனுவில், "மாநகராட்சி 44வது வார்டில் உள்ள பாறைக்குழியால் பல உயிரிழப்புகள் நடக்கின்றன. யாருக்கும் பயன்படாத பாறைக்குழியை மூட, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என்று தெரிவித்துள்ளனர்.

* உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி கொடுத்த மனுவில், "தாராபுரம், அலங்கியம், தளவாய்பட்டிணம், கொளிஞ்சிவாடி பகுதிகளில், பழைய அமராவதி பாசன பகுதிகளில், இந்தாண்டு 5,000 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. "இன்னும் 20 நாட்களில் அறுவடை நடக்க உள்ளது. விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலமாக, தாராபுரம், அலங்கியம், குளத்துப்பாளையம், கோவிந்தாபுரம் பகுதிகளில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும்.

எவ்வித அரசியல் தலையீடும் இல்லாமல், நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட வேண்டும்,' என்று தெரிவித்துள்ளார்.

* ஆம் ஆத்மி கட்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுந்தரபாண்டியன் கொடுத்த மனுவில், "திருப்பூர் மாவட்டத்தில் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் வாக்காளர் விவரங்களை இணைய தளம் வாயிலாக தேடும் பொழுது, பாகம் எண், வரிசை எண் முன்னுக்குபின் முரணாக உள்ளன. எனவே, திருத்தியமைக்கப்பட்ட வாக்காளர் பட்டியலை வெளியிட வேண்டும்,' என்று தெரிவித்துள்ளார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### துளசி எண்ணெய் மூலம் புற்றுநோய்க்கு சிகிச்சை விஞ்ஞானிகள் முயற்சி



வாஷிங்டன், ஜன. 19: இந்தியாவில் மருத்துவ குணங்களை கொண்ட செடிகளில் ஒன்றாக துளசி இருந்து வருகிறது. பல வீடுகளில் இன்றும் துளசியை வளர்த்து வருகின்றனர். இந்நிலையில் மரபணுமாற்றம் செய்யப்பட்ட துளசியில் அதன் மருத்துவ குணம் எப்படி இருக்கும் என்பது குறித்த ஆய்வை இந்திய-அமெரிக்க விஞ்ஞானிகள் இணைந்து மேற்கொண்டனர். இந்த ஆய்வில் கிடைத்த முடிவுகள் குறித்து வெஸ்டர்ன் கென்டகி பல்கலைக் கழக உதவி பேராசிரியர் சந்திகாந்த் மாணி கூறியதாவது:

மரபணு மாற்றம் செய்யப்பட்ட துளசியில் அதிகளவு மருத்துவ குணம் உள்ளது. குறிப்பாக மார்பக புற்றுநோயை குணப்படுத்தும் ஆற்றல் மரபணு மாற்றம் செய்யப்பட்ட துளசியில் அதிகம் இருப்பது தெரியவந்துள்ளது.

துளசியில் இருந்து கிடைக்கும் எண்ணெய்யில் அதிக மருத்துவ குணம் உள்ளது. அந்த எண்ணெய்யை புற்நோய் ஏற்படுத்தும் செல்கள் மீது தடவினோம். மரபணு மாற்றம் செய்யப்பட்ட துளசி எண்ணெய் தடவப்பட்ட இடத்தில் புற்றுநோய்

பரப்பும் செல்கள் வளர்ச்சி நின்றுபோனது. எங்களின் இந்தப் பரிசோதனையின் மூலம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட துளசி மருத்துவ குணம் வெளிப்பட்டுள்ளது. இதையடுத்து இந்த எண்ணெய்யை புற்றுநோய் மருத்துவ சிகிச்சையில் மருந்தாக பயன்படுத்தவும் திட்டமிட்டு ள்ளோம். கிழக்கத்திய நாடுகளில் இதுபோன்ற செடிகளை நேரடியாக மருத்துவ பயன்பாட்டுக்கு மட்டும் என்றில்லாமல், நோய் தீர்க்கும் சத்து பொருட்களாக பயன்படுத்தி வருகின்றனர்.

**ராசிபுரம் கூட்டுறவு சங்கத்தில் 3,861 மூட்டை பருத்தி ரூ.80 லட்சத்துக்கு ஏலம்**



ராசிபுரம்: ராசிபுரத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ.80 லட்சத்திற்கு பருத்தி விற்பனை செய்யப்பட்டது. சேலம் மாவட்டம், ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தின் (ஆர்சிஎம்எஸ்) சார்பில் கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம் நேற்று நடந்தது. இதில் ராசிபுரம், சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், பட்டணம், மற்றும் திருச்சி, பெரம்பலூர் மாவட்டங்களில் இருந்தும் 100க்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர். இவர்கள் 3,861 மூட்டை பருத்தியை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் டிசிஎச் ரகம் அதிகபட்சம் ரூ.7,679 க்கும், குறைந்தபட்சம் 6,995க்கும், ஆர்சிஎச் ரகம் அதிகபட்சம் ஸி5,829க்கும், குறைந்தபட்சம் ரூ.5,120க்கும் ஏலம் போனது. இதன் மூலம் நேற்று ஒரேநாளில் ரூ.80 லட்சத்திற்கு பருத்தி விற்பனையானது.

**கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

சென்னை, : ஆந்திர மாநிலம், கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. தற்போது பூண்டி ஏரிக்கு வினாடிக்கு 137 கன அடி கிருஷ்ணா நீர் வந்து கொண்டிருக்கிறது.

2011ம் ஆண்டு வரதயபாளையம் அருகே உப்பளமடுகு பகுதியில் கால்வாய் உடைந்ததால் ரூ.50 லட்சத்தில், 70 மீட்டர் தூரத்துக்கு இணை கால்வாய் அமைக்கப்பட்டு, அதன் வழியாக கடந்த ஆண்டு தண்ணீர் திறக்கப்பட்டது. அதன்பிறகு கடந்தாண்டு மார்ச் மாதம் உப்பளமடுகு பகுதியில் ரூ.6.5 கோடியில் புதிய கால்வாய் அமைக்கப்பட்டு அதன்வழியாக கடந்த 10ம்தேதி தண்ணீர் திறக்கப்பட்டது.

தற்போது கண்டலேறு அணையில் இருந்து வினாடிக்கு 2500 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. கடந்த 12ம்தேதி தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாய்ன்ட் பகுதிக்கு, வினாடிக்கு 15 கன அடியாக வந்த தண்ணீர், கடந்த 14ம்தேதி 114 கன அடியாகவும், 17ம்தேதி 135 கன அடியாகவும் உயர்ந்தது.

நேற்று காலை 147 கன அடியாக நீர்வரத்து அதிகரித்தது. பூண்டி ஏரிக்கு 137 கன அடி செல்கிறது. தற்போது பூண்டி ஏரியில் 123 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது.

கிருஷ்ணாநீர் வருவதற்கு முன்பு பூண்டி ஏரியில் 93 மி.கன அடி தண்ணீர் இருந்தது. பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு 53 கன அடியும், குடிநீர் சுத்திகரிப்புக்காக பேபி கால்வாய் வழியாக 10 கன அடியும் வெளியேற்றப்படுகிறது.

கண்டலேறு அணையில் இருந்து, கடந்த ஜூலை முதல் அக்டோபர் வரை 4 மாதத்தில் 8 டிஎம்சி தண்ணீர் வரவேண்டும். ஆனால் இதுவரை தமிழகத்துக்கு 1.8 டிஎம்சி தண்ணீரே வந்துள்ளது.

ஆந்திர, தமிழக நதிநீர் ஒப்பந்தப்படி தமிழகத்துக்கு 15 டிஎம்சி தண்ணீர் தரவேண்டும். 3 டிஎம்சி சேதாரம் போக 12 டிஎம்சி வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும்**

புதுச்சேரி, : புதுச்சேரி மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு தலைவர் ஏம்பலம் செல்வம் வெளியிட்ட அறிக்கை:

புதுவை மாநிலத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலம் பாலுக்கு லிட்டருக்கு ரூ.19 மட்டுமே வழங்கப்படுகிறது. அண்டை மாநிலங்களில் கொள்முதல் விலை உயர்த்தப்பட்ட போதிலும் புதுவையில் இதுவரை உயர்த்தவில்லை. உள்ளூர் உற்பத்தியாளர் மூலம் பாண்லே நிறுவனத்துக்கு தினமும் 25 ஆயிரம் லிட்டர் பால் மட்டுமே வழங்கப்படுகிறது.ஆனால் அந்நிறுவனம் நாள் ஒன்றுக்கு 1 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்கிறது. மீதமுள்ள பாலை அண்டை மாநிலங்களில் இருந்து லிட்டர் ரூ.29 வரை கொடுத்து கொள்முதல் செய்கிறது. யாருக்கு லாபத்தில் பங்கு அளிக்கப்படுகிறது என விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாண்லே நிறுவனம் உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் காட்டும் பாரபட்சத்தால் 1 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி 25 ஆயிரமாக குறைந்துவிட்டது. உள்ளூர் உற்பத்தியை பெருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும். இல்லாவிட்டால் அனைத்து கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களையும் ஒருங்கிணைத்து கால்நடைகளுடன் சட்டசபையை முற்றுகையிடுவோம். இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

**பருவமழை பொய்த்ததால் பூ விளைச்சல் பாதிப்பு கமுதி விவசாயிகள் கவலை**

கமுதி, : பருவமழை பொய்த்ததால் சாமந்தி, செவ் வந்தி, மல்லிகை, கனகாம்பரம் பூக்கள் விளைச் சல் பாதிப்படைந்துள்ளது. போதிய விலையும் கிடைக்காததால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

கமுதி அருகே உள்ள ரா மசாமிபட்டி, கிழாமரத்து பட்டி, காவடிபட்டி, நீராவி, கரிசல்குளம், க.விள க்கு, கீழ முடிமன்னார்கோட் டை, மேல முடிமன்னார்கோட்டை உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் பூ விவசாயம் நடக்கிறது.

இந்த பகுதி விவசாயி கள் தங்கள் நிலங்களில் இந் தாண்டு சாமந்தி, செவ்வந்தி, மல்லிகை, பிச்சி, கனகாம்பரம், வெள்ளை பூ உள்ளி ட்ட ரகங்களை அதிகளவில் பயிரிட்டுள்ளனர்.கடந்தா ண்டு அதிக விளைச்சல் கிடைத்து அதிக லாபம் கிடைத்துள்ளது. இதனால் பூ விவசாயிகள் மகிழ்ச்சியடைந்த னர். இந்தாண்டு பருவமழை போ திய அளவு பெய்யாத தால் சாமந்தி, செவ்வந்தி, மல்லி கை, பிச்சி, கனகாம்பரம், வெள்ளை பூ விளைச் சல் குறைந்துள்ள நிலையில் விலையும் குறைந்துள்ளது. இதனால் பூ பயிரிட்டுள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இதுகுறித்து பூ விவசாயி முருகன் கூறுகையில், கட ந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் தங்களுக்கு பூ விளைச்சல் அதிகமடைந்து லாபம் கிடைக்கும் என எதிர்பார்தோம்.

ஆனால் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இந்தாண்டு பருவமழை போதிய அளவு பெய்யாததால் விளைச்சல் பாதிக்கப்பட்டு குறைந்துவிட்டது. பூக்களுக்கு இந்தா ண்டு போதிய விலையும் இல்லாமால் உள்ளது. தற்போது வெயில் தாக்கம் தொடங்கியுள்ளதால் பூச்செடிகள் கருகி வருகின்றன.

நெல், மிளகாய் விவசாயிகளுக்கு அரசு வறட்சி நிவாரணம் வழங்கியதைப் போல தங்களுக்கும் அரசு வழங்க நிவாரணம் வேண்டும் என்றார்.

## குன்னூர் ஏல மையத்தில் தேயிளை தூள் கிலோவுக்கு ரூ.3 உயர்வு

குன்னூர், : குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 3வது ஏலம் கடந்த வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் நடந்தது. இதில் மொத்தம் 17.73 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. அதில் இலை ரகம் 9.37 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.36 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு சற்று அதிகரித்ததால் 84 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. ஆனால் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3 விலை உயர்ந்துள்ளது.

இந்தவார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.55 முதல் ரூ.60 வரையிலும், உயர்வகை ரூ.100 முதல் ரூ.160 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.65 முதல் ரூ.68 வரையிலும், உயர் வகை ரூ.120 முதல்¢ரூ.190 வரை விலை கிடைத்தது. சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோ

ஒன்றுக்கு ரூ.204, ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.231 விலை கிடைத்துள்ளது. அடுத்த ஏலம் வரும் வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் நடக்கிறது. இதற்காக மொத்தம் 12.15 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

இந்த வாரம் மொத்தம் 10.72 லட்சம் கிலோ விற்பனையானது. அதன்மூலம் சராசரி விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.82.91 பைசா விலை கிடைத்தது. இதன்படி மொத்த வருமானம் ரூ.8.85 கோடி கிடைத்துள்ளது. ரூ.3.93 லட்சம் வருவாய் குறைந்துள்ளது. விற்பனை அளவு குறைந்து இருந்தாலும் தேயிலை தூளிவிலை உயர்ந்து வருவதால் வரும் வாரங்களில் வருமானம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏர் உழும் பணியில் மீண்டும் கால்நடைகள்**

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் உள்ளது. விவசாயிகள் கடந்த காலங்களில் விளை நிலங்களை உழுவதற்கு கால்நடைகளை பயன்படுத்தினர். இயந்திரங்கள் இல்லாத காலங்களில் கால்நடைகளுக்கு அதிக மவுசு ஏற்பட்டது. இதனை கருத்தில் கொண்டே உழவர்களின் நண்பனாக கால்நடைகள் கருதப்படுகிறது. கால்நடைகளை போற்றும் விதமாக மாட்டு பொங்கலும் கொண்டாடப்படுகிறது. தற்போது கால்நடைகளின் பயன்பாடு குறைந்துள்ளதால் கால்நடைகளின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. ஏர் உழுவதற்கு இயந்திரங்களை அதிக அளவு பயன்படுத்துகின்றனர். இதன் காரணமாகவே கால்நடைகளின் தோற்றம் குறைந்து வருகிறது. ஏர் உழுவதற்கு கடந்த காலங்களில் இளம் கன்றுகளையே விவசாயிகள் பழகி வந்தனர். இவைகள் நன்றாக பழக்கப்பட்ட கால்நடைகள் விளை நிலங்களில் உழுவதற்கு பயன்படுத்தப்பட்டது.

தற்போது கால்நடைகளின் உபயோகம் குறைந்து இருந்தாலும் டீசல் விலை உயர்வு, உழுவதற்கான விலை ஏற்றம் ஆகியவற்றின் காரணமாக மீண்டும் கால் நடைகளை உற்பத்தி செய்வ தில் விவசாயிகள் தீவிரமாக உள்ளனர். ஏர் உழுவதற்காக கால்நடைகளை பழகி வருவதிலும் விவசாயிகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

**கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

ஊத்துக்கோட்டை, : ஆந்திர மாநிலம், கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு வரும் நீரின் வரத்து அதிகரித்துள்ளது. தற்போது பூண்டி ஏரிக்கு வினாடிக்கு 137 கன அடி கிருஷ்ணா நீர் வந்து கொண்டிருக்கிறது. கடந்த 2011ம் ஆண்டு வரதயபாளையம் அருகே உப்பளமடுகு பகுதியில் கால்வாய் உடைந்ததால் ரூ.50 லட்சத்தில், 70 மீட்டர் தூரத்துக்கு இணை கால்வாய் அமைக்கப்பட்டு, அதன் வழியாக கடந்த ஆண்டு தண்ணீர் திறக்கப்பட்டது.கடந்தாண்டு மார்ச் மாதம் உப்பளமடுகு பகுதியில் ரூ.6.5 கோடியில் புதிய கால்வாய் அமைக்கப்பட்டு கடந்த 10ம்தேதி புதிய கால்வாய் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது கண்டலேறு அணையில் இருந்து வினாடிக்கு 2500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த 12ம்தேதி தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாய்ன்ட் பகுதிக்கு, வினாடிக்கு 15 கன அடியாக வந்த தண்ணீர், கடந்த 14ம்தேதி 114 கன அடியாகவும், 17ம்தேதி 135 கன அடியாகவும் வந்தது. நேற்று காலை 147 கன அடியாக நீர்வரத்து அதிகரித்தது. பூண்டி ஏரிக்கு 137 கன அடி செல்கிறது. தற்போது பூண்டி ஏரியில் 123 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு 53 கன அடியும், குடிநீர் சுத்திகரிப்புக்காக பேபி கால்வாய் வழியாக 10 கன அடியும் வெளியேற்றப்படுகிறது.கண்டலேறு அணை யில் இருந்து, கடந்த ஜூலை முதல் அக்டோபர் வரை 4 மாதத்தில் 8 டிஎம்சி வர வேண்டும்.இதுவரை தமிழகத்துக்கு 1.888 டிஎம்சி தண்ணீரே வந்துள்ளது. ஆந்திர, தமிழக நதிநீர் ஒப்பந்தபடி தமிழகத்துக்கு 15 டிஎம்சி தண்ணீர் தரவேண்டும். 3 டிஎம்சி சேதாரம் போக 12 டிஎம்சி வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**கோமாரி நோய் பாதிப்பு கலெக்டர் ஆய்வு**

மதுராந்தகம், : மதுராந்தகம் அருகே தண்டரை புதுச்சேரி கிராமம் அமைந்துள்ளது. இங்கு கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக கால்நடைகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இருந்தன. அதில் ஒரு சில மாடுகள் இறந்து போனது.

இந்த நோய் பாதிப்பு காரணமாக கால்நடைகளின் விசேஷ தினமான மாட்டு பொங்கலை அப்பகுதியின் பெரும்பாலான மக்கள் கொண்டாடவில்லை.இதனை தொடர்ந்து கால்நடை மருத்துவ குழுவினர் அப்பகுதிக்கு சென்று சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்நிலையில் மாவட்ட ஆட்சி தலைவர் பாஸ்கரன் அப்பகுதியில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் கால்நடைகளுக்கு தீவிர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். அந்த கிராமத்தில் இருந்து 8 கி.மீ தூரத்தில் உள்ள கால்நடைகளுக்கு உடனடியாக தடுப்பூசி போட வேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் சுமார் 200 கிலோ நோய் தடுப்பு பொடியை வழங்க வேண்டும் என கால்நடை துறை அதிகாரிகள், மருவத்துவர்களிடம் தெரிவித்தார்.

தலைமையிட இணை இயக்குநர் ஆனந்த் பத்மநாபன், காஞ்சிபுரம் மண்டல இணை இயக்குநர் கோவர்தனன், கால்நடை துறை பேராசிரியர்கள் பரிமள்ராய், ஹேமலதா, கால்நடை துறை உதவி இயக்குநர் ஸ்ரீதர்பாபு, டாக்டர் ரமேஷ், மதியழகன், கபிலன், கார்த்திக், நதியா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.மருத்துவ குழுவினர் மேலும் 5 நாள் தங்கி தொடர் சிகிச்சை அளிக்க உள்ளனர். ஒவ்வொரு மாடுகளுக்கும் ரத்த பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

**பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும்**

புதுச்சேரி, : புதுச்சேரி மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு தலைவர் ஏம்பலம் செல்வம் வெளியிட்ட அறிக்கை:

புதுவை மாநிலத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மூலம் பாலுக்கு லிட்டருக்கு ரூ.19 மட்டுமே வழங்கப்படுகிறது. அண்டை மாநிலங்களில் கொள்முதல் விலை உயர்த்தப்பட்ட போதிலும் புதுவையில் இதுவரை உயர்த்தவில்லை. உள்ளூர் உற்பத்தியாளர் மூலம் பாண்லே நிறுவனத்துக்கு

தினமும் 25 ஆயிரம் லிட்டர் பால் மட்டுமே வழங்கப்படுகிறது.ஆனால் அந்நிறுவனம் நாள் ஒன்றுக்கு 1 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்கிறது. மீதமுள்ள பாலை அண்டை மாநிலங்களில் இருந்து லிட்டர் ரூ.29 வரை கொடுத்து கொள்முதல் செய்கிறது. யாருக்கு லாபத்தில் பங்கு அளிக்கப்படுகிறது என விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாண்லே நிறுவனம் உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் காட்டும் பாரபட்சத்தால் 1 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி 25 ஆயிரமாக குறைந்துவிட்டது. உள்ளூர் உற்பத்தியை பெருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும். இல்லாவிட்டால் அனைத்து கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களையும் ஒருங்கிணைத்து கால்நடைகளுடன் சட்டசபையை முற்றுகையிடுவோம். இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு மேலும் குறைப்பு**




மேட்டூர்,

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இப்படி திறக்கப்படும் தண்ணீர் பாசன தேவைக்கு ஏற்ப அதிகரிக்கவோ, குறைக்கவோ செய்யப்படும். இதன்படி, கடந்த 16–ந் தேதி முதல் டெல்டா பாசனத்திற்காக அணையில் இருந்து வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது.

வருகிற 28–ந் தேதி வரை டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட வேண்டிய கால நிர்ணயம் உள்ள நிலையில் பாசன பகுதிகளில் பயிர்கள் அறுவடைக்கு தயாராகி வருவதால் அங்கு தண்ணீர் தேவை குறைந்து வருகிறது. இதன் காரணமாக நேற்று காலை 6 மணி முதல் பாசனத்திற்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு மேலும் குறைக்கப்பட்டு வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடியாக திறக்கப்பட்டது.

நீர் திறப்பு குறைப்பின் காரணமாக மளமளவென சரிந்து வந்த அணையின் நீர்மட்டம் மெதுவாக குறைந்து வருகிறது. இன்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 52.59 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 83 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

**முந்திரி மரங்களில் பூக்கள் பூக்க தொடங்கியது கடந்த ஆண்டை காட்டிலும் அதிக மகசூல் கிடைக்கும்**



பண்ருட்டி,

பண்ருட்டி பகுதியில் முந்திரி மரங்களில் பூக்கள் பூக்க தொடங்கியது. இதனால், விவசாயிகள் கடந்தை ஆண்டை காட்டிலும் அதிக மகசூல் கிடைக்கும் என நம்பிக்கையில் உள்ளனர்.

<u>தானே புயல்</u>

கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலம் என்றால் பீங்கான் பொருட்கள், சிதம்பரம் என்றால் நடராஜர் கோவில் தான் நிறைவிற்கு வரும். அந்த வரிசையில், பண்ருட்டி என்றாலே அனைவருக்கும் முதலில் நினைவில் வருவது முந்திரி மற்றும் பலா பழம் தான்.

பண்ருட்டி பகுதியில் விளையக்கூடிய முந்திரி மற்றும் பலா பழத்திற்கு பொதுவாக அதிக சுவையும், மனமும் உண்டு. இதனால், பண்ருட்டி பலா, முந்திரிக்கு தனி

மவுசு உண்டு என்றே சொல்லாம். அதிகளவில் வெளிநாடுகளுக்கு பண்ருட்டியில் இருந்து பலா, முந்திரி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட தானே புயல் பண்ருட்டி பகுதி முந்திரி, பலா விவசாயிகளின் வாழ்க்கையை புரட்டி போட்டது. ஏனெனில், தானே புயலில் பண்ருட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள 100–க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 40 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டு இருந்த முந்திரி மற்றும் பலா மரங்கள் பலத்த சேதமடைந்தன. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்பு அடைந்தனர்.

***முந்திரி சீசன்***

புயலால் முழுவதுமாக வேரோடு சாய்ந்த மரங்களை தவிர்த்து, கிளைகள் மட்டும் நொடிந்த மரங்கள் மீண்டும் துளிர்விட்டு வளர்ந்ததால் அவற்றில் இருந்து கடந்த ஆண்டு ஒரளவுக்கு முந்திரி விளைச்சல் கிடைத்தது. இதற்கிடையே மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல ஆயிரம் முந்திரி, பலா கன்றுகள் நடப்பட்டது. மேலும், சேதமடைந்த மரங்களை வேளாண்மை அதிகாரிகளின் ஆலோசனையின் பெயரில் மீண்டும் வளர்க்க தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டது.

தற்போது, நடப்பாண்டில் முந்திரி சீசன் வருகிற மார்ச் மாதம் முதல் தொடங்க இருப்பதால், பண்ருட்டி பகுதியில் உள்ள அனைத்து முந்திரி மரங்களும் தற்போது பூ பூக்க தொடங்கிவிட்டன. ஏனினும் தானே புயலின் பாதிப்பு இன்னும் மறையவில்லை என்பதால் விவசாயிகள் எதிர்பார்த்த அளவிற்கு முந்திரி விளைச்சல் கிடைக்காது. இருந்த போதிலும் பூக்களை பார்த்து விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**7 மூட்டைகள்**

இது குறித்து சாத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், தானே புயலால் நாங்கள் பயிர் செய்த ஏராளமான முந்திரி, பலா மரங்கள் வேரோடு

சாய்ந்தன. இருப்பினும் கிளைகள் நொடிந்த மரங்கள் தற்போது நன்கு துளிர்விட்டு வளர்ந்துள்ளன. எனவே, அதில் இருந்து எங்களுக்கு சிறிது வருமானம் கிடைக்கும். தானே புயல் பாதிப்பு முன்பு ஒரு ஏக்கரில் பயிரிடப்பட்டு இருந்து முந்திரி மரங்களில் இருந்து ஆண்டுதோறும் எங்களுக்கு 10–ல் இருந்து 12 மூட்டை வரையில் முந்திரி விளைச்சல் கிடைத்தது. ஆனால், புயல் பாதிப்பு பின்பு கடந்த வருடம் ஏக்கருக்கு அவை 3–ல் இருந்து 5 மூட்டையாக குறைந்தது.

கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் மேலும் முந்திரி மரங்கள் படர்ந்து விரிந்து வளர்ந்துள்ளதால், நடப்பு சீசனில் ஏக்கர் ஒன்றுக்கு 7 மூட்டை வரை முந்திரி விளைச்சல் கிடைக்கும். முழுமையாக காற்றில் சாய்ந்த மரங்களுக்கு பதில் நாங்கள் புதியமரக்கன்றுகளை அதே இடத்தில் நட்டு உள்ளோம். அவை நன்கு வளர்ந்து விளைச்சலை கொடுக்க இன்னும் 3 முதல் 5 ஆண்டுகள் ஆகும். அது வரையில் விவசாயிகளுக்கு 100 சதவிகித முந்திரி விளைச்சல் கிடைக்காது. அதே போன்று பலா பழம் விளைச்சலும், ஒரளவுக்கு கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் சிறிது அதிகரிக்கும். என்றார்.

**நத்தம் பகுதியில் இலந்தை பழம் சீசன் தொடங்கியது**



நத்தம், -

நத்தம் பகுதியில் இலந்தை பழம் சீசன் தொடங்கியுள்ளது. ஒரு படி ரூ.80-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

<u>இலந்தை பழம்</u>

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மலையும், மலை சார்ந்த பகுதியாகவும் விளங்கி வரு கிறது. நத்தம் அருகே உள்ள மலையூர், லிங்கவாடி, பரளி, பட்டணம்பட்டி, குட்டுபட்டி, உலுப்பகுடி, செல்லப்பநாயக் கன்பட்டி, சிறுகுடி மற்றும் செந்துறை உள்பட பல்வேறு கிராமங்களில் சாலை ஓரங் களிலும், மலையடிவாரங்களிலும், ஓடைப்பகுதி, கண்மாய்க்கரை போன்ற பகுதிகளிலும் இலந்தை மரங்கள் ஆங்காங்கே உள்ளன.

இலந்தை மரம் ஆண்டுக்கு ஒரு முறை பலன் தரும். ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் முதல் வாரத்தில் இலந்தை பழ சீசன் தொடங்கி விடும். பிப்ரவரி மாதம் வரை இந்த பழ சீசன் இருக்கும். தற்போது நத்தம் பகுதியில் இலந்தை பழம் சீசன் தொடங்கி விட்டது. ஒரு படி ரூ.80-க்கு விற்பனையாகிறது.

<u>மாணவ, மாணவிகள்</u>

இந்த இலந்தை பழங்களை பள்ளி மாணவ, மாணவிகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி வாங்கி சாப்பிடுகின்றனர். கடும் வறட்சியிலும் விளைச்சல் பெறும் இலந்தை பழம் கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு மகசூல் குறைந்து விட்டது. இது குறித்து ஊராளிபட்டியை சேர்ந்த விவசாயி மோகன் கூறியதாவது, நத்தம் வட்டாரத்தில் மா, கொய்யா, பப்பாளி, சப்போட்டா, நாவல், பலா, சீத்தா மற்றும் இலந்தை பழ வகைகளும் உரிய காலங்களில் அறுவடை செய்யப்படுகிறது.

இலந்தை பழம் நத்தம் பகுதியில் விளையக்கூடியது. மதுரை, திண்டுக்கல், துவரங்குறிச்சி உள்பட பல்வேறு ஊர்களுக்கு பஸ்களிலும், வேன்களிலும் அனுப்பப்படுகிறது. இந்த பழமானது மற்ற பழங் களைக் காட்டிலும் வாசனை திறன் நிறைந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

**குறைந்த சத்துள்ள உணவுகளை உண்ணும் மாடுகளுக்கு பால் உற்பத்தியை அதிகரிக்க புதிய மருந்து கண்டுபிடிப்பு**



திண்டுக்கல், -

குறைந்த சத்துள்ள உணவுகளை உண்ணும் மாடுகளுக்கு பால் உற்பத்தி அதிகரிப்பதற்கு புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இந்த மருந்து கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மூலம் வினியோகம் செய்யப்பட உள்ளது.

<u>பால் உற்பத்தி</u>

திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 3 லட்சம் மாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. தற்போது பருவமழை பொய்த்ததால் மாடுகளுக்கு போதிய உணவு கிடைக்காமல் பால் உற்பத்தி வெகுவாக குறைந்து வருகிறது. இதனை அதிகப்படுத்துவதற்கு புதிய வழிமுறைகளை பின்பற்றுவது தொடர்பாக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மாடு வளர்ப்போருக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

இதில் கிராமப்புற பகுதிகளில் இருக்கும் நலிவடைந்த விவசாயிகள் தங்கள் கறவை மாடுகளுக்கு மேய்ச்சல் நிலங்களில் கிடைக்கும் பசுந்தீவனங்களையும், அரிசி கழுவிய தண்ணீரையும் உணவாக அளிக்கின்றனர். இதனால் அவர்களுடைய

மாடுகளுக்கு பால் உற்பத்தியை அதிகப்படுத்த முடியாத நிலை உருவானது. இதனை தொடர்ந்து சென்னையில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் குறைவான சத்துள்ள உணவுகளை உண்ணும் மாடுகளின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஆராய்ச்சி மேற்கொண்டது.

<u>உணவு ஊக்கி மருந்து</u>

அந்த ஆராய்ச்சியின் முடிவில், மாடுகளின் பால் உற்பத்தியை பெருக்குவதற்கு 'தனுவாஸ் – கிராண்ட் டானிக்' என்ற பெயரில் புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இந்த வகை மருந்தை தினமும் 7 லிட்டர் பால் கொடுக்கும் மாடுகளுக்கு அரிசி கழுவிய தண்ணீரில் கலந்து தரப்பட்டு சோதனை செய்யப்பட்டது. இதில் சிறந்த பலன் கிடைத்தது.

இதனை தொடர்ந்து புதிய மருந்தை மாடுகளுக்கு உணவு ஊக்கியாக பயன்படுத்த மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இதுகுறித்து திண்டுக்கல் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் மருத்துவர் பீர்முகமதுவிடம் கேட்ட போது, அவர் கூறியதாவது:–

மாடுகளின் பால் உற்பத்தி குறைந்து கொண்டே வருகிறது. இதனை அதிகப்படுத்துவதற்கு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் கடந்த 5 ஆண்டுகளாக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆராய்ச்சியில் குறைந்த சத்துள்ள உணவு வகைகளான வைக்கோல், புண்ணாக்கு அல்லாத தீவனங்களை பயன்படுத்தும் போது பால் உற்பத்தி குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. இதனை கருத்தில் கொண்டு மாடுகளின் வயிற்றில் உள்ள 4 இரைப்பைகளில் இருக்கும் நன்மை செய்யும் பாக்டீரியாக்களின் செயல்பாடுகளை அதிகரிப்பதற்கு புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள உணவு ஊக்கி மருந்தை பயன்படுத்தலாம்.

<u>10 மில்லி லிட்டர் மருந்து</u>

இந்த மருந்து 10 மில்லி லிட்டர் கொண்ட சிறிய வகை பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு உள்ளது. தினமும் காலையில் 10 மில்லி லிட்டர், மாலையில் 10 மில்லி லிட்டர் மருந்தை அரிசி கழுவிய தண்ணீர், புளித்த நீர் ஆகியவற்றில் நன்றாக கலந்து மாடுகளுக்கு தரவேண்டும். இந்த மருந்தை நேரடையாக மாடுகளுக்கு வழங்கக் கூடாது. இந்த மருந்தினால் மாடுகளுக்கு பக்க விளைவுகள் ஏற்படாது. மேலும் இது மாடுகளுக்கு அதிக அளவில் தானிய வகை, மாவுப்பொருட்களை உண்பதால் ஏற்படும் வயிறு உப்பும் நோயை குணப்படுத்தும் தன்மை கொண்டது.

இந்த மருந்தை ஒரு மாதத்திற்கு பயன்படுத்தும் வகையில் 10 மில்லி லிட்டர் கொண்ட 60 சிறிய வகை பாக்கெட்டுகள் ஒரு பாக்கெட்டில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இந்த மருந்தை 1 வாரம் பயன்படுத்தினாலே அதன் பலனை விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம். உணவு ஊக்கி மருந்தை பயன்படுத்துவதால் பால் உற்பத்தி தினமும் 7 லிட்டர் பால் தரும் மாடுகள் கூடுதலாக 1½ லிட்டர் தருவதற்கு வழி ஏற்படும். மாடுகளின் பால் உற்பத்தியை அதிகப்படுத்தும் இந்த புதிய வகை மருந்து விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்து உள்ளது.

இந்த மருந்து திண்டுக்கல் கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மையத்தில் வழங்கப்படுகிறது. மேலும் இந்த மருந்தை பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கும், கால்நடை மருத்துவர்களுக்கும் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இவ்வாறு பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் மருத்துவர் பீர்முகமது கூறினார்.

**தாகம் தணிக்கும் தர்ப்பூசணி சாகுபடி**



நீர்ச்சத்து நிறைந்த தர்ப்பூசணியின் மருத்துவ குணங்களையும், சாகுபடி முறைகளையும் இங்கு காண்போம்.

தர்பூசணி சாகுபடி

நீர்ச்சத்து நிறைந்த தர்ப்பூசணி மருத்துவ பயன்களை கொண்டுள்ளது. சிட்ரல்லுஸ் லனாடஸ் என்ற தாவரவியல் பெயரைக்கொண்டுள்ள, குக்குர்பிடேசியே குடும்பத்தைச் சார்ந்த தர்பூசணியின் மருத்துவ குணங்களையும், சாகுபடி முறைகளையும் பற்றி பார்க்கலாம்.

தர்பூசணியில், பி.கே.எம் 1, சுகர்பேபி, அர்காமானிக், டிராகன் கிங், அர்கா ஜோதி, அர்கா ஐஸ்வர்யா, அம்ருத் அபூர்வா, பூசா பெடானா, புக்கிசா, மைதிலா (மஞ்சள்), தேவயானி (ஆரஞ்சு) போன்ற ரகங்கள் உள்ளன.

அங்ககச்சத்து நிறைந்த, வடிகால் வசதியுள்ள, 6.5 முதல் 7.5 முடிய கார அமிலத்தன்மை கொண்ட மணல்சாரி நிலம் ஏற்றது. ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை தர்பூசணி பயிரிட ஏற்ற மாதங்களாகும்.

நன்கு உழுது 8 அடி அகல பார் அமைத்து, பார்களுக்கு இடையில் கால்வாய் பிடிக்க வேண்டும். ஏக்கருக்கு 1½ கிலோ விதை தேவைப்படும். கால்வாயை ஒட்டி

3 அடி இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். குத்துக்கு 2 செடி இருக்குமாறு, விதைத்த 15–வது நாள் கலைத்து விட வேண்டும்.

விதைகளை ஊன்றுமுன் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பின் வாரம் ஒருமுறை நீர்ப்பாய்ச்ச வேண்டும். சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பது, நீர்ப்பயன்பாட்டைச் சிக்கனமாக்கி நிறைவான மகசூல் பெற உதவும்.

உர அளவு

அடி உரமாக ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் இட வேண்டும். மேலும் ஏக்கருக்கு 22 கிலோ மணிச்சத்து தரவல்ல 140 கிலோ சூப்பர் பாஸ்பேட், 22 கிலோ சாம்பல் சத்து தரவல்ல 40 கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை அடி உரமாக இடவேண்டும். விதைத்த 30–வது நாள் 22 கிலோ தழைச்சத்து தரவல்ல 50 கிலோ யூரியவை மேல் உரமாக இட வேண்டும்.

எத்தால் வளர்ச்சி ஊக்கியை 10 லிட்டர் நீருக்கு 2½ மி.லி (250 பி.பி.எம்) அளவில் கலந்து, விதைத்த 15–வது நாள் முதல் வாரத்துக்கு ஒருமுறை என 4 முறை தெளித்து மகசூலை அதிகரிக்கலாம்.

பயிர் பாதுகாப்பு

வண்டுகள் தடுக்க ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மி.லி மாலத்தியான் 50 ஈ.சி தெளித்துக் கட்டுப்படுத்தலாம். பழ ஈயை கட்டுப்படுத்த நன்கு உழவு செய்து பழ ஈ–யின் கூட்டுப்புழுக்களை வெளிப்படுத்தி அழிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பழங்களை அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும். பழ ஈ–யின் தாக்குதல் வெப்பகாலத்தில் மிகக்குறைவாகவும், மழைக்காலத்தில் மிக அதிகமாகவும் இருக்கும். எனவே அதற்கேற்ப விதைப்பு தேதியை நிர்ணயம் செய்ய வேண்டும்.

ஒரு பாலீத்தின் பையில் 5 கிராம் நனைத்த கருவாடு, ஒரு மி.லி டைக்குளோர்வாஸ் நனைத்த பஞ்சு வைத்த கருவாட்டுப்பொறிகளை ஏக்கருக்கு 20 என்ற அளவில் வைத்து பழ ஈக்களைக் கவர்ந்து அழிக்கலாம். (20 நாட்களுக்கு ஒரு முறை நனைத்த

கருவாடும், வாரத்திற்கு ஒரு முறை டைக்குளோர்வாஸ் நனைத்த பஞ்சும் மாற்ற வேண்டும்.) லிண்டேன் பூச்சிக்கொல்லி மற்றும் தாமிர, கந்தகப் பூரண கொல்லிகள் இப்பயிருக்கு தாவர நச்சாகப் பயிரை பாதிப்பதால் அவற்றை உபயோகிக்கக் கூடாது. 120 நாட்களில் ஏக்கருக்கு 15 டன் மகசூல் எடுக்கலாம்.

எனவே விவசாயிகள் மேற்காணும் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து, கோடையில் தாகம் தணிக்கும் தர்ப்பூசணியைச் சாகுபடி செய்து, உயர் மகசூல் பெறலாம். இந்த தகவலை, சேரன்மாதேவி தோட்டக்கலை உதவி இயக்குனர் தி.சு.பாலசுப்பிரமணியன் தெரிவித்து உள்ளார்.

பாக்ஸ் எடை குறைவுக்கு சிறந்த மருந்து

தர்பூசணி, நோய் எதிர்ப்பு சக்தியை தரும் மிகச்சிறந்த ஆண்டி ஆக்ஸிடெண்ட்கள் சிலவற்றைக் கொண்டுள்ளது. இருதய நோய்கள், நீரழிவு நோய், குடல் புற்று நோய் ஆகியவற்றை தடுக்க தர்ப்பூசணி உதவுவதாக சில ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. வைட்டமின்கள் ஏ, பி, சி ஆகியவற்றை அதிகம் கொண்டுள்ளது. 92 சதவீதம் நீர்ச்சத்தைக் கொண்டுள்ள தர்ப்பூசணி, குறைந்த அளவு கலோரிகளைக் கொண்டுள்ளதாலும், கொழுப்பே இல்லாததாக இருப்பதாலும், எடை குறைப்புக்கு இது மிகவும் ஏற்ற உணவு.

அதிக அளவில் இதில் உள்ள பொட்டாசியம் தாது உப்பு, ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதும், இதயத்துடிப்பை சீராக்குவதிலும், சிறுநீரகக்கல் உருவாவதை தடுப்பதிலும் உதவுகிறது. இதில் உள்ள பீட்டா கரோட்டின், லைகோபின் ஆகிய கரோட்டினாய்டுகள் புரோஸ்டேட் சுரப்பி, மார்பகம், நுரையீரல், குடல் ஆகியவற்றில் சுறுசுறுப்பாய் இயங்க உதவுகிறது. இதில் உள்ள சிட்ருலின், அர்ஜினைன் ஆகிய அமினோ அமிலங்கள் ஒட்டு மொத்த இருதய செயல்பாட்டுக்கும், யூரியாவை வெளியேற்றி ரத்த சுத்திகரிப்புக்கும் உதவுகின்றன.

# இன்றைய வேளாண் செய்திகள்

## தூத்துக்குடி: 3 லட்சம் ஏக்கரில் மானாவாரி பயிர் பாதிப்பு; வறட்சி நிவாரணம் கேட்கும் தூத்துக்குடி விவசாயிகள்





தூத்துக்குடி மாவட்டத்தில், மானாவாரியாக சாகுபடி செய்யப்பட்ட உளுந்து, பாசிப்பயறு அறுவடை தொடங்கியுள்ளது. போதிய மழை இல்லாததால், பயிர்கள் கருகி 20 சதவிகித மகசூல் கூட கிடைக்கவில்லை. விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

தூத்துக்குடியை வறட்சி மாவட்ட மாக அறிவித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

மானாவாரி சாகுபடி

தூத்துக்குடி மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், எட்டயபுரம், கோவில்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் மானாவாரி விவசாயம் அதிகம். வடகிழக்கு பருவமழையை நம்பித்தான் இந்த பகுதி விவசாயம் இருக்கிறது.

கடந்த இரு ஆண்டுகளாகவே வடகிழக்கு பருவமழை சரியாக பெய்யாததால், விவசாயப் பரப்பு சுருங்கி வருகிறது. இந்த ஆண்டாவது போதிய மழை பெய்யும்

என்ற நம்பிக்கையில், இப்பகுதி விவசாயிகள் மானாவாரியாக உளுந்து, பாசிப்பயிறு, மக்காசோளம், கம்பு போன்றவற்றை சாகுபடி செய்தனர்.

மாவட்டம் முழுவதும் சுமார் 3 லட்சம் ஏக்கரில் மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. முதலில் சில நாட்கள் பருவமழை நன்றாக பெய்ததால் பயிர்கள் முளைத்து வேகமாக வளரத் தொடங்கின. அதன் பிறகு மழை சரியாக பெய்யவில்லை. பெரும்பாலான பயிர்கள் கருகிவிட்டன. கடந்த வாரம் இரு தினங்கள் பெய்த மழையும் பயிர்களை காப்பாற்ற உதவவில்லை.

**கண்ணீரோடு அறுவடை**

கருகியது போக மிச்சம் மீதமுள்ள பயிர்களை அறுவடை செய்யும் பணியை விவசாயிகள் தற்போது தொடங்கியுள்ளனர். தூத்துக்குடி- மதுரை சாலை, தூத்துக்குடி- திருநெல்வேலி சாலை போன்ற சாலைகளில், விவசாயிகள் உளுந்து, பாசிப்பயறு போன்ற பயிர்களை அறுவடை செய்து உலர வைத்து, பிரித்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கண்ணீரோடு விதைப்பவன், மகிழ்ச்சியோடு அறுவடை செய்வான் என்பது பழமொழி. ஆனால், இங்கோ மகிழ்ச்சியோடு விதைத்த விவசாயிகள் கண்ணீரோடு அறுவடை செய்து வருகின்றனர். பயிர்களில் 20 சதவிகித மகசூல் கூட கிடைக்காததால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தூத்துக்குடியை அடுத்த புதூர்பாண்டியாபுரம் பகுதியில் சாலையில் பாசிப்பயறு செடிகளை உலர வைத்து, மணிகளை தனியாகவும், பதருகளை தனியாகவும் பிரித்து கொண்டிருந்த ஏ.ராமேஸ்வர லிங்கம் கூறுகையில்,

ஒரு ஏக்கரில் பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிரிட்டேன். இதில் பெரும்பாலான பயிர்கள் வறட்சியால் கருகிவிட்டன. மீதமுள்ள பயிர்களை தற்போது அறுவடை செய்துள்ளேன்.

ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வரை செலவு செய்தேன். அடியுரம், 2 முறை பூச்சி மருந்து என பராமரித்தேன். ஆனால், தற்போது ஏக்கருக்கு 25 கிலோ பாசிப்பயறு மட்டுமே கிடைத்துள்ளது. இது ரூ.2ஆயிரத்துக்கு மட்டுமே விலை போகும். பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நிலைமை மோசம். கடந்த ஆண்டு கூட ஏக்கருக்கு 50 கிலோ வரை மகசூல் கிடைத்தது. மழை பொய்த்துப் போனதே இதற்கு காரணம். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், என்றார்.

3 லட்சம் ஏக்கர் பாதிப்பு

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில செயலாளர் கே.பி.பெருமாள் கூறியதாவது: தூத்துக்குடி மாவட்டத்தில் சுமார் 3 லட்சம் ஏக்கரில் மானாவாரி பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு பாதிப்பு அதிகம். 20 சதவிகிதம் கூட மகசூல் கிடைக்கவில்லை. பாசிப்பயறு, உளுந்து போன்றவற்றில் ஏக்கருக்கு 400 கிலோ வரை மகசூல் கிடைக்கும். ஆனால், இந்த ஆண்டு 50 கிலோ கூட கிடைப்பது கஷ்டம்.

மக்காச்சோளம் பயிர்களை பொறுத்தவரை கதிர் வந்த நிலையில் கருகிவிட்டன. ஒரு சில இடங்களில் கிணறு மற்றும் ஆழ்துளை கிணற்று பாசனம் மூலம் சிறிதளவு பயிரை காப்பாற்றியுள்ளனர். மற்றபடி முற்றிலும் கருகிவிட்டன. இதேபோல் கம்பு உள்ளிட்ட பயிர்களிலும் மகசூல் கிடைக்கவில்லை.

நிவாரணம் வேண்டும்

எனவே, தூத்துக்குடியை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளை முறையாக கணக்கெடுத்து, விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்க வேண்டும்.

கடந்த ஆண்டு மாநிலம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டதால், தமிழக அரசு வறட்சி நிவாரணம் அறிவித்தது. இந்த ஆண்டு ஒரு சில மாவட்டங்களில் ஓரளவுக்கு மழை பெய்துள்ளது. தூத்துக்குடி உள்ளிட்ட சில மாவட்டங்களில்தான் வறட்சி ஏற்பட்டுள்ளது.

எனவே, தூத்துக்குடி மாவட்டத்துக்கு சிறப்பு கவனம் செலுத்தி அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஆண்டு விவசாயிகளிடம் பயிர் காப்பீட்டு திட்டத்துக்கு பிரிமீயம் வசூல் செய்யவில்லை. இதனால், விவசாயிகளுக்கு காப்பீட்டு பணம் கிடைக்காது. ஏற்கனவே கடந்த ஆண்டு செலுத்திய பிரிமீயத்துக்கான காப்பீட்டு பணம் இதுவரை கிடைக்கவில்லை.

### ஜன.20-ல் ஆர்ப்பாட்டம்

இதனை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் வரும் திங்கள்கிழமை (ஜன.20) தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம். மாவட்ட ஆட்சியரிடமும் மனு கொடுத்துள்ளோம். எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்ரை ஆலையை திறக்க வைகோ கோரிக்கை

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை உடனடியாக திறந்து உற்பத்தியைத் துவக்கிடுமாறு தமிழக அரசுக்கு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, 105 ஏக்கர் நிலப்பரப்பில் படாளம் கிராமத்தில் அமைக்கப்பட்டு, 18.3.1961 முதல் கரும்பு அரவையைத் துவக்கி, சர்க்கரை உற்பத்தி செய்து நல்ல லாபத்தில் இயங்கி வந்தது.

நல்ல லாபத்துடன் இயங்கி வந்த மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை, 1996 ஜனவரி முதல் மாவட்டத்தின் பாதி வட்டங்களைப் பிரித்து, அங்கு விளையும் கரும்புகளை தனியார் சர்க்கரை ஆலைக்கு அரசால் ஒதுக்கப்பட்டது. இதனால் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குத் தேவையான கரும்பு வரத்து குறைந்து, அரவை பாதிக்கப்பட்டு, ஆலை இயக்கப்படுவது அடிக்கடி நிறுத்தப்பட்டதால் இயந்திரம் பழுது அடைந்து நின்று போனது.

மொத்தத்தில் தனியார் சர்க்கரை ஆலைக்காக, நல்ல லாபத்தில் இயங்கி வந்த மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை நலியச் செய்து முடக்கி, சிலர் ஆதாயம் அடைந்தனர்.

2001 ஆம் ஆண்டு முழுவதுமாக நிறுத்தப்பட்ட நிலையில், ஆலையைத் தனியாருக்குத் தாரை வார்க்க இருந்ததை அறிந்து, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுகோள் விடுத்து அறிக்கை வெளியிட்டேன். கூட்டுறவு சங்கத்தினரும் உறுதியாக எதிர்த்ததன் விளைவு, நீதிமன்ற தலையீட்டின் பேரில் வேறு வழி இன்றி, 2009 ஆம் ஆண்டு ஆலை புதுப்பிக்கப்பட்டு இயங்கி வந்தது.

வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறுவதைப் போன்று, 2013-14 ஆம் ஆண்டு கரும்பு பயிரிட்டு, கடந்த டிசம்பர் மாதமே சர்க்கரை அரவைக்குத் தயாராகியும், ஆலை நிர்வாகம் ஆலையை இயக்காமல், கரும்பு வெட்ட அனுமதி தராமல் கரும்பு முதிர்ந்து ஈரப்பதம் குறைந்து வயலிலேயே காய்ந்து கருகிக் கொண்டு இருக்கிறது.

கரும்பு பயிரிடும்போது இருந்த மகிழ்ச்சி அறுவடையின் போது இல்லாமல், தற்போது கரும்பு விவசாயம் கசந்து போய் உள்ளது .

கரும்பு விவசாயம் செய்ய கடன்மேல் கடன் வாங்கி, வட்டி கட்ட முடியாமல் விரக்தியுடன் விளிம்பில் உள்ளனர், அட்சய பாத்திரத்தைக் கையில் ஏந்தி அமுதத்தை அள்ளி வழங்கிய மணிமேகலையின் வாரிசுகளான விவசாயிகள்.

நல்ல லாபத்தில் இயங்கி வந்த மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை இயக்குவதில் உள்ள பிரச்சனையைக் களைந்து, உடனடியாக உற்பத்தியைத் துவக்கிட வேண்டுகிறேன்.

கரும்புக்கு குறைந்தபட்ச ஆதார விலை கிடைக்காததால், கரும்பு விவசாயம் செய்ய விவசாயிகள் முன்வராமல் இருக்கின்றனர். எனவே, கரும்பு டன் ஒன்றுக்கு 3,500 கொடுத்து, கரும்பு விவசாயத்தை ஊக்குவித்திட வேண்டும். இல்லையெனில் தற்போது அறிவித்துள்ள டன் ஒன்றுக்கு 2650 ரூபாயை முழுமையாக விவசாயிகளுக்கு வழங்கிவிட்டு, கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்கு ஆலை நிர்வாகமே வெட்டுக் கூலியையும், போக்குவரத்துச் செலவையும் கொடுத்திடக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு வைகோ வலியுறுத்தியுள்ளார்.